**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No. 2/2022 In O.S.No. 202/2017**

1) சண்முகம்

2) விஜயலட்சுமி

3) மணிமேகலை

4) பாலசுப்பிரமணி

5) தங்கவேலு

.....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1) ராஜீ (எ) சுப்பிரமணியன்

2) துளசி

3) துரைசெட்டியார் (இறப்பு)

4) செந்தில்குமார்

5) சிவானந்தம்

6) திருவேங்கடம்

7) அருண்குமார் .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 01.12.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. மலர்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராகவும், 2 , 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள், 1 மற்றும் 2 புரபோஸ்டு பார்ட்டிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**ஆணையுரை**

இறந்துபோன 3 ம் பிரதிவாதி துரைசெட்டியார்க்கு வாரிசு சேர்க்காததால்

அவருக்கு எதிராக வழக்கு அற்றுபோனதை ரத்து செய்யவேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 9 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1. மனுதாரர் மனுவில் 1ம் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் வாதி. மனுதாரரும் மற்ற மனுதாரர்களும் பிரதிவாதிகள் பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள போது 3ம் பிரதிவாதி துரைசெட்டியார் 16.09.2019ம் தேதி இறந்துவிட்டார். மேற்படி இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு 09.12.2019ம் தேதிக்குள் வாரிசுகள் சேர்க்க மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். இறந்து போன 3ம் பிரதிவாதியின் இறப்பு மற்றும் அவரது வாரிசுகள் பற்றிய விபரங்கள் தற்போது தான் தெரிய வந்த காரணத்தாலும் உரிய காலத்தில் மனுதாரர்களால் வாரிசு சேர்க்க மனு தாக்கல் செய்ய இயலாமலும், 3ம் பிரதிவாதி துரைசெட்டியாருக்கு வாரிசு சேர்க்காததால் அவருக்கு எதிராக வழக்கு அற்றுபோனதை ரத்து செய்யவேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு 3ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு அற்றுபோனதை ரத்து செய்யவேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்உரை ஆட்சேபனையின் சுருக்கம்**

2. மனுதாரர்களின் மனு நிலைக்கத்தக்கதல்ல. 3ம் பிரதிவாதி 10.09.2019ம் தேதி இறந்து விட்டதாக தெரிகிறது என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட புரபோஸ்டு நபர்கள் மட்டுமே வாரிசுகள் என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் 3ம் பிரதிவாதி இறந்து போன விபரத்தை தெரிந்து கொண்டு 3 ஆண்டுகாலமாக வாரிசுகள் சேர்க்க உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் வழக்கை காலம் கடத்தும் நோக்குடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மேற்படி மனுதாரர்களின் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ

முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது மனுதாரர்கள் /வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருந்தபோது 3ம் பிரதிவாதி துரைசெட்டியார் 16.09.2019ம் தேதி இறந்துவிட்டார். அவருக்கு 09.12.2019ம் தேதிக்குள் வாரிசு சேர்த்திருக்கவேண்டும். மேற்படி தேதிக்குள் வாரிசு மனு தாக்கல் செய்யாததால் வழக்கு அற்றுபோய்விட்டது. 09.12.2019ம் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் Setaside Abatement மனுதாக்கல் செய்திருக்கவேண்டும். 3ம் பிரதிவாதி துரைசெட்டியார் இறந்துபோன விபரமே தங்களுக்கு தற்போது தான் தெரிய வந்தது என்றும், அதன் பிறகு உரிய காலத்தில் வாரிசு பற்றி விபரம் அறிய முடியாமல் இருந்ததால் வாரிசு மனுவை தாக்கல் செய்ய இயலவில்லை என்றும், அதனால் 3ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு அற்றுபோய்விட்டது எனக் கூறப்பட்டது. 3ம் பிரதிவாதி இறந்த விபரமும், வாரிசு விபரமும் தெரியாத காரணத்தால் மனு தாக்கல் செய்யவில்லை என காலதாமதத்திற்கு மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும்படியாகவே உள்ளது. எனவே, நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து

சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/-P.பாலமுருகன்**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.

| | | |
|---|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

**Sd/-P.பாலமுருகன்**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குளித்தலை.